மாகாண பொது நிர்வாக செயலகம், வட மாகாணம்
පළාත් රාජ්‍ය පරිපාලන කාර්යාලය, උතුරු පළාත
PROVINCIAL PUBLIC ADMINISTRATION SECRETARIAT,
NORTHERN PROVINCE

(2)

தொடர் இல:
යොමු අංකය:

எனது இல:
මගේ අංකය
My No: NP/02/16/Re-emp

11.01.2011

மாகாணப் பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம்: NP/02/2011(02)

அமைச்சின் செயலாளர்கள்
பிரதிப் பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
வட மாகாணம்

மீளச் சேவையில் நியமனங்கள் வழங்குதல்

ஓய்வு பெற்ற அரசாங்க அலுவலர்களை மீளச் சேவையில் அமர்த்துதல் தொடர்பாக விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படும் பொழுது, பின்வரும் விடங்களைக் கவனத்தில் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

மீள் நியமன விண்ணப்பங்கள் கௌரவ ஆளுநரின் அனுமதிக்காக மாகாணப் பொது நிர்வாக செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்படும் பொழுது, விண்ணப்பதாரியின் வரிசையமைச்சின் செயலாளரினால் மட்டுமே ஒப்பமிடப்படப்பட்டு, விண்ணப்பங்கள் இறுதி சிபார்சுடன் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

இதற்கு மாறாக, அமைச்சு மட்டத்தில் செயலாளர் தவிர்ந்த பதவிநிலை தரத்திலுள்ள அலுவலர்களது சிபார்சுடன் அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளபடாது நிராகரிக்கப்படும்.

மீள் நியமன விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படும் பொழுது, அன்றைய தினத்திலான உறுதிப்படுத்தப்பட்ட அரச மருத்துவச் சான்றிதழ் இணைத்தனுப்பி வைக்கப்படல் அவசியமாகும். அத்துடன், மீள் நியமனம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அலுவலர் கடமையில் இருக்கும் நிலையில் அவ்வுத்தியோகத்தரது உடல் நலமோ மன நலமோ பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டால், அதுபற்றி நியமன அதிகாரிக்கு உடன் அறிவித்தல் வேண்டும்.

ஒப்பந்த அடிப்படையிலான நியமனங்களுக்கு விண்ணப்பங்கள் சிபார்சு செய்யப்படும் பொழுது, அந்நியமனத்தின் தேவைப்பாட்டிற்கான தகுந்த காரணம் மற்றும் விரிவான விளக்கம் என்பன செயலாளரினாலும் திணைக்களத் தலைவரினாலும் தரப்படு தல் வேண்டும்.

தி.இராசநாயகம்
பிரதிப் பிரதம செயலாளர்

கன்னியா வீதி, வரோதயநகர்,
திருக்கோணமலை, இலங்கை.
Gen Office : 026-3266502
Fax : 026-2226959

කන්නියා පාර, වරෝදයනගර්,
ත්‍රිකුණාමලය, ශ්‍රී ලංකාව.
DCS : 026-3267151
: 026-2226959

Kanniya Road, Varothayanagar,
Trincomalee, Sri Lanka.
Email : npminppa@sltnet.lk
Website : www.np.gov.lk